# Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Sessions Judge, Magalir Neethi Mandram,
(Fast Track Mahila Court), Villupuram.

Sessions Case No.248-2018

Deposition of witness No. for Prosecution / Defence / Court

| | | |
|---|---|---|
| Name | : சிவக்குமார் | அ.சா.5 Lw.6 |
| Father's Name | : தேசிங்கு | |
| Village | : ஒரத்தூர் போஸ்ட், லஷ்மிபுரம் மதுரா, | |
| Taluk | : விக்கிரவாண்டி தாலுக்கா | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : 45 | |
| Time | : 11.50 am - 11.54 am | |

Solemnly affirmed in accordance with the provisions of X of 1873 on the 05th day March 2021.
05.03.2021

முதல் விசாரணை.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் டிரைவர் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். சம்பவ இடத்திற்கு அருகில் என் நிலம் உள்ளது. 19.11.2017 அன்று நான் மற்றும் ஊர்ஜனங்கள் அனைவரும் கும்பலாக அங்கு போனோம். என் நிலத்திற்கு பக்கத்தில் ஓடை உள்ளது. ஓடையில் ஒரு பெண் பிரேதம் கிடந்தது. அந்த பெண் பிரேதம் சுமார் 35 வயதுக்கு மேல் இருக்கும். அந்த பிரேதத்தில் பச்சை புடவை, பச்சை ஜாக்கெட், ரோஸ்கலர் பாவாடை இருந்தது. முட்டிக்குமேலே துணி தூக்கியிருந்தது. மல்லார்ந்த வாக்கில் கிடந்தார். ஒரு கன்னத்தில் காயம் இருந்தது. ஒரு கன்னம் சிவந்துபோய் இருந்தது. மதுபாட்டில் ஒன்று பிரேதத்திற்கு பக்கத்தில் கிடந்தது. லேடிஸ் உபயோகப்படுத்தும் நாப்கீன் அங்கு இருந்தது. ஊர் தலைவர், மணியக்காரர், மணியக்காரர் கூட இருக்கும்

கிராம உதவியாளர் மற்றும் விக்கிரவாண்டி போலீசார் வந்து விசாரணை செய்தார்கள். எனக்கு தெரிந்ததை போலீசிடம் சொன்னேன்.
எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.